
# நெஞ்சைப் பிழியும் நெசவாளர் துயரம்!



தலைவர் கலைஞர்

# நெஞ்சைப் பிழியும் நெசவாளர் துயரம்!

## தலைவர் கலைஞர்

வெளியீடு:
**திராவிட முன்னேற்றக் கழகம்**
"அண்ணா அறிவாலயம்"
367 - 379, அண்ணா சாலை,
சென்னை - 600 018.

முதற்பதிப்பு : ஆகஸ்ட் 2002

விலை : ரூ.5/-

அச்சிட்டோர் : சில்வர் ஸ்டிரிக்ஸ்
பீட்டர்ஸ் சாலை,
சென்னை-14.



# அகவையிலும் அரசியலிலும் சிறுவர் சிறுமியர்!

உடன்பிறப்பே,

தெருவில் ஒரே கூச்சல் – "அய்யோ! அய்யோ! என் குடிசை எரியுதே! உள்ளே குழந்தை தூங்குதே" என்று அலறிக் கொண்டு ஒரு தாய் குடிசைக்குள் ஓடுகிறாள். "அம்மாடியோவ்! தீ பரவிகிட்டே இருக்கே! அடப்பாவிகளா! நாலாவது தெருவிலே பிடிச்ச நெருப்பு, நம்ப தெருவுக்கும் தாவிட்டுதே!" வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு கதறுகிற ஒலி! குய்யோமுறையோ எனும் ஒலம்!

"தீ அணைக்கிற வண்டிக்கு டெலிபோன் பண்ணி எவ்வளவு நேரமாச்சு; இன்னம் வரலியா?"

"அய்யய்யோ, எங்க வீட்டுக்குள்ளயும் பரவுதே தீ!...."

"டேய் ராமு! வெளியே ஓடி வா! ஓடி வா!"

"அடியே கண்ணு புஷ்பா; கொல்லைப்பக்கமா ஓடு!....முடிஞ்ச வரையிலும் பெட்டி சட்டிகளை எடுத்துகிட்டு வந்துடுங்க!....மாடு கண்ணுகூட மிஞ்சாது போலிருக்கே! அட கடவுளே! எல்லாம் போச்சு... எல்லாம் நெருப்புக்கு இரையாச்சு!...."

இப்படி 'ஓ'வென்று கதறுகிறார்கள்! ஓலமிடுகிறார்கள்! ஒவ்வொருவரும் தங்கள் உடைமைகள் எரிவதைப் பார்த்து பிரமை பிடித்தவர்கள் போல பிதற்றுகிறார்கள்!

அப்போது அந்தத் தெருவின் முகப்பு வீட்டிலிருந்து ஒருவன் ஓடிவந்து; வீட்டு வாசலில் நின்று கொண்டு – "ஏய்; முத்தா! முனியா! என்னோடு ஓடி வாங்க! முடிஞ்சவரையில் நெருப்பை அணைப்போம் – இயன்ற அளவு உதவி செய்வோம் – அதோ பாருங்க; அந்தப் பொம்பளை தன் குழந்தையை காப்பாத்த எரியிற குடிசைக்குள்ளே ஓடியிருக்கு; ஓடுங்க! ஓடுங்க! முதல்ல அந்தத் தாயையும் குழந்தையையும் காப்பாத்துங்க!" என்று உரக்கக் கூவி அவர்களை அங்கே விரைந்திடச் செய்தான். அவன் ஆணை கேட்டு அவன் தோழர்களும் செயல்படத் தொடங்கினர்.

"வாங்க! வாங்க! வாங்க! ஆளுக்குக்
கொஞ்சமா ஆபத்திலே உதவுவோம்!"

என்ற முகப்பு வீட்டுக்காரனின் வேண்டுகோள் வீண் போகவில்லை. எரியும் வீடுகளில் இருந்து, கூரைகள் இழுத்து எறியப்பட்டன. அதனால் அவற்றை ஒட்டிய சில வீடுகள் காப்பாற்றப்பட்டன. அந்தச் சமயத்தில் தீயணைப்பு வண்டியும் வந்து சேர்ந்தது. முகப்பு வீட்டுக்காரன் மற்றும் முனியன், முத்தன் ஆகியோர் தீயணைப்பு வண்டியில் வந்த அதிகாரிகளை வரவேற்று; "நீங்க கொஞ்சம் முன்னாடி வந்திருந்தா, இன்னும் பல வீடுகளைக் காப்பாத்தியிருக்கலாம். எப்படியும் இப்பவாவது வந்ததற்கு நன்றி" என்றனர்.

அந்த அதிகாரி ஆவேசமுற்றவராக அதட்டலான குரலுடன் "ஏய்! உங்களை யார் இந்தத் தெருவிலே தீ அணைக்கச் சொன்னது! எங்களுக்குத் தெரியாதா? நாங்க வர மாட்டோமா? இப்போ, வந்திருக்கிறோமா இல்லியா? எங்களுக்கில்லாத அக்கறையா உங்களுக்கு?" என்று தாண்டிக் குதிக்கத் தொடங்கி விட்டார்.

முகப்பு வீட்டுக்காரன், அந்த அதிகாரியைப் பார்த்து; "அய்யா! இது யாருடைய தனிப்பட்ட பிரச்சினையும் இல்லை – பொதுப் பிரச்சினை! நெருப்பு பிடிச்சு வீடுகள் எரிந்தாலோ; வெள்ளம் வந்து ஊர் முழுகினாலோ; அதைத் தடுத்து ஜனங்களைக் காப்பாத்த இருதயமுள்ள எல்லோருக்கும் கடமை உண்டு! நான் மட்டுந்தான் செய்வேன்னு வீம்பு பண்ணாமல், "நான், நீ" என்று போட்டி போட்டுக்கொண்டு நல்ல காரியம்; பொதுக் காரியம் செய்யிற மனசு வேண்டும்! அந்த உணர்வோடதான்; அதிலும் உங்களுக்கு உதவியாத்தான் நாங்களும் இந்த வேலையிலே ஈடுபட்டிருக்கிறோம்" என்று விளக்க மளித்ததை அந்த அதிகாரி காதில் போட்டுக் கொள்ளவில்லை.

அதிகாரியின் அலட்சியத்தையும் ஆணவக் குரலையும் முகப்பு வீட்டுக்காரனும், முத்தன், முனியன் முதலியவர்களும் பொருட்படுத்திக் கொண்டிருக்கவில்லை. தங்கள் கடமையில் கண்ணுங்கருத்துமாக இருந்தனர்.

உடன்பிறப்பே; இது ஏதோ கதையென்று யாரும் கருத வேண்டாம். கைத்தறி நெசவாளர்களின் கதியற்ற நிலைமையைப் போக்கி; அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி துளிர்த்திடச் செய்ய; நிறைவான பணிகளை இப்போது ஆற்றிட இயலாவிடினும் – அவர்களின் பசி போக்கிடவும், பட்டினிச் சாவுகளுக்கு அந்தச் சமூகத்தைப் பலியாக்கிடாமல் தடுத்திடவும்; தமிழக அரசை வலியுறுத்துவது ஒருபுறம் இருப்பினும் – உடனடி நிவாரணமாக அவர்கள் வசிக்கும் பகுதிகளில் பசிக்கு ஒரு தீர்வாகக் கஞ்சித் தொட்டிகளைத் தொடங்கிடுமாறு கழக அமைப்புகளையும், கழக அணியினரையும் கேட்டுக்கொண்டது; உடனடியாக

ஒவ்வொரு பகுதியிலும் நிறைவேற்றப்பட்டு வருவது கண்டு உளம் பூரிக்கிறேன்; என் உடன்பிறப்புகளின் ஆற்றல் அறிந்து மட்டுமல்ல; அன்பு இதயங்களைப் புரிந்துங்கூட!

நெசவாளர்களின் துன்பம் கண்டு நெஞ்சு பதைத்து அவர்தம் இன்னல் போக்கிடக் குரல் கொடுத்தது தி.மு.கழகம். ஆம்; 1953ஆம் ஆண்டு அண்ணா காலத்திலேயே கைத்தறி நெசவாளர் துயர் துடைத்திடத் தூய பணிகள் ஆற்றியிருக்கிறோம். நாடு முழுதும் சுற்றி அவர்களை நாசத்திலிருந்து விடுவிக்க; அப்போது நாடாண்டவர்களிடம் முறையிட்டிருக்கிறோம் – அறப்போர்க் குரல் கொடுத்திருக்கிறோம்!

நான் எழுதி, நானும் நடிகர் திலகம் சிவாஜியும் பட்டிதொட்டி பட்டினக்கரைகள் என பல இடங்களில் நடித்த "பரப்பிரம்மம்" நாடகத்தில்; ஒரு நெசவாளி, வீட்டில் உள்ள பொருள்களையெல்லாம் விற்றுவிட்டு; கடைசியாகத் தன் மனைவியின் புடவையையும் விற்க வேண்டிய அவலம் ஏற்பட்டபோது; அவன்,

"அய்யா சோம்பேறி இல்லை நான் – உழைத்து உழைத்து உலுத்துப் போனவன்! கண் விழித்து, கஷ்டப்பட்டு, துணி நெய்து காலத்தைக் கழித்தேன்! உழைக்கக் கை இல்லாமல் இல்லை! உடலில் சக்தியில்லாமல் இல்லை! ஆனால் உழைக்க வழி? உற்பத்தி செய்த ஆடைக்கு விலை இல்லை – விற்பனை இல்லை – ஏழை நெசவாளிக்கு; எனக்கு ஏது வேறு கதி? வீட்டில் தறி தூங்குகிறது! பசி, தூங்குமா என்ன? நான் என்ன செய்வேன்? போகாத ஊரில்லை; வேண்டாத கோயில் இல்லை! அய்யா புண்யவான்களே! பொங்கல் திருவிழாவுக்கு வீட்ல சல்லிக்காசு இல்லை! கிழிஞ்ச துணியை

இடுப்பிலே சுத்திகிட்டு; இந்தப் புடவையை விக்கச் சொல்லி கொடுத்தா எங்க வீட்டு மகராசி – இதையும் யாரும் வாங்குவாரில்லையா? அப்படின்னா இந்தச் சேலை நானோ என் மனைவியோ தூக்கிலே தொங்கத்தான் உதவுமா?''

என்று தெருவில் நின்று வெதும்பி அழுததை காட்சியாக்கினேன். நடிப்போடும், நாடக எழுத்தோடும் நின்று விடவில்லை. தி.மு.க. செயற்குழு எடுத்த முடிவின்படி கைத்தறித் துணிகளை கழகத் தலைவர்களும் முன்னணியினரும் ஊர் ஊராகச் சென்று விற்பதென்று முடிவு செய்து 1953ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா திருச்சியிலே வீதி வீதியாகச் சென்று கைத்தறித் துணிகளை விற்றார்.

நான் அதே நாளில் சென்னையிலே கைத்தறித் துணிகளை தெருத்தெருவாகச் சென்று விற்பனை செய்தேன்.

அந்த ஒருநாள் தமிழ்நாடு முழுதும் ஒரு இலட்ச ரூபாய்க்கு கைத்தறித் துணிகள் கழகத் தலைவர்களால் விற்கப்பட்டன.

நான் சென்னையில் மட்டும் இருபதாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தேன். அந்த விற்பனையின் போதுதான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடம் கைத்தறித் துணிகளை வாங்கியதுடன், அன்று முதல் கதராடையிலிருந்து மாறி கைத்தறி ஆடையிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினார்.

இக்கடிதத்துடன் இணைத்துள்ள பழைய புகைப் படத்தைப் பார்! 1953இல் சென்னையில் நான் கைத்தறித் துணி விற்றபோது எடுக்கப்பட்ட படம்!



**தலைவர் கலைஞர்** தலைமையில் 1953ம் ஆண்டு நெசவாளர் துயர் துடைக்க கைத்தறி துணி விற்றபோது எடுத்த படம்.

வாகனத்தின் மேல் பகுதியில் (இடது பக்கம்) அமர்ந்திருப்பது உடுமலை நாராயண கவிராயரின் சீடர் சமத்தூர் செல்லமுத்து – அவருக்கு நேர் கீழே என்னருகே கம்பீரமாக நிற்பவர் அன்றைய சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் என்னரும் நண்பர் மறைந்த கண்ணபிரான் (கவிஞர் வேழவேந்தனின் மாமனார்)

"செந்தமிழ் நாட்டுக் கைத்தறி வேட்டி
சேலைகள் வாங்குவீர்!
நம் திராவிட இனத்தவர் க்ஷேமம் வேண்டிச்
சிங்கார ஆடைகள் வாங்குவீர்!"

உடுமலையாரின் இந்தப் பாடல் மிக நீளமானது – இதனை நண்பர் செல்லமுத்தும் நாங்களும் பாடிக் கொண்டே சென்னையில் மூலை முடுக்குத் தெருக்களில் எல்லாம் கைத்தறித் துணி வியாபாரத்தைச் செய்தோம்!

அதாவது 1953ஆம் ஆண்டு – இப்போது என்னைப் பார்த்து கைத்தறியாளர்களுக்காக கண்ணீர் விடுவதற்கு நீ யார் என்று யாராவது கேட்டால்; அவர்கள் அப்போது பிறந்திருப்பார்களோ என்னவோ; ஒருவேளை பிறந்திருந்தால் அகவையிலும் சரி, அரசியலிலும் சரி; சிறுவர் சிறுமிகளாகத்தான் இருந்திருப்பார்கள்!

1.8.2002 அன்புள்ள,
முரசொலி **மு.க.**

# கண்ணீர் துடைத்திடுக முதலில்; கதைகள் விடலாம் பிறகு

**கேள்வி:-** கைத்தறி நெசவாளர்களின் இப்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம் தி.மு. கழக ஆட்சியின் தவறான கொள்கைகள்தான் என்று ஜெயலலிதா குற்றஞ்சாட்டியிருக்கிறாரே?

**கலைஞர்:-** கைத்தறியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியையும், கஷ்டங்களையும், பசி பட்டினிகளையும் பெரிதுபடுத்தி அரசாங்கத்தின்மீது குற்றம் கூற வேண்டுமென்று நான் எண்ணாமல், அரசுக்கு உதவியாகத்தான் கஞ்சித் தொட்டிகளைத் திறக்க வேண்டுமென்று கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். அதில் ஆத்திரமடைந்த ஜெயலலிதா பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அறிக்கைகளை வெளியிட்டு என்னையும், கழகத்தையும், கழக அரசையும் இல்லாத பொய்களைக் கூறித் தாக்கி வருகிறார். அதன் தொடர்ச்சியாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஏதோவொரு கற்பனையாக இருக்கிறதே அல்லாமல், கைத்தறியாளர்களின் கண்ணீரைத் துடைப்பதாக இல்லை. நாட்டிலே எந்தக் காரியம் நடைபெற்றாலும், உடனே அதை திசை திருப்ப ஜெயலலிதாவிற்கு தி.மு.க.வை குறை கூறவேண்டும். அந்த வகையில்தான் ஜெயலலிதா தி.மு.க. அரசின் மீது குறைகூறி நீண்ட அறிக்கைகள் வெளியிடுகிறார்.

தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக தனியாக ஒரு ஜவுளிக் கொள்கை 1997ஆம் ஆண்டு கழக அரசிலேதான் உருவாக்கப்பட்டது. மேலும் இதன் செயற்பாட்டினைக் கண்காணிக்க “துணி நெசவு பெருமன்றம்” ஒன்றும் கழக அரசிலே அமைக்கப்பட்டது. அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் கழக ஆட்சியிலேதான் 27 ஆண்டுகளுக்குப் பிறகு 98இல் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு 1–9–98 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு பொறுப்பேற்றிருந்தது. ஆனால் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பிவிட்டு மறு தேர்தலையே நடத்தவில்லை.

1995–96ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கைத்தறித் துறையிலே மிகப் பெரிய நெருக்கடி நிலை ஏற்பட்டது. கூட்டுறவு சங்கங்களிலே உற்பத்தியான சரக்குகள் விற்பனையாகாமல் மிக அதிக அளவிலே தேங்கிக் கிடந்தன. நெசவாளர்களுக்கு நெய்வதற்கு பாவு கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டு, அவர்களால் தொடர்ந்து நெசவுத் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. 96ஆம் ஆண்டு நான் பொறுப்பிற்கு வந்தவுடன் இந்த நெருக்கடி நிலையை அறிந்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஓர் அனைத்துக்கட்சி உயர்மட்டக் குழுவினை அமைத்தேன். அந்தக் குழு மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, நெசவாளர் பகுதிகளுக்கெல்லாம் நேரில் சென்று, நெசவாளர்களைச் சந்தித்து பிரச்சினைகளையெல்லாம் கேட்டு, அவைகளுக்கு தீர்வு காணும் வகையிலே

பரிந்துரைகளைச் செய்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது உடனடியாக முடிவுகள் எடுத்து சட்டப் பேரவையிலேயே கைத்தறி துறை புனரமைப்புக்காக 24 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

புரட்சிகரமான இந்த அறிவிப்பின் மூலம் நெசவுத் தொழிலுக்கே புத்துயிர் தரப்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய வாழ்வளிக்கப்பட்டது. கைத்தறித் துணி விற்பனைக்கு வழங்கப்பட்டு வந்த தள்ளுபடி மானியத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே இருந்ததை மாற்றி கழக ஆட்சியில் 1-4-1998 முதல், ஆண்டு முழுவதற்கும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்படும் என்று அறிவித்து, அதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 75 கோடி ரூபாய் அளவிற்கு தள்ளுபடி மானியத் தொகை வழங்கப்பட்டது தி.மு.கழக ஆட்சியிலேதான் என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற பாணியில் கழக அரசின் மீது ஜெயலலிதா புழுதியை வாரி இறைத்துள்ளார்.

365 கோடி ரூபாய் மதிப்புள்ள தேங்கிக் கிடந்த கைத்தறி துணிகளுக்கு மே 98 முதல் அக்டோபர் 98 முடிய ஆறு மாத காலத்திற்கு 30 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி அளிக்கப்பட்டதின் மூலமாக மட்டும் 202 கோடி ரூபாய் மதிப்புள்ள தேங்கிக் கிடந்த துணிகள் விற்பனையானது என்பதை பழைய கோப்புகளைக் கொண்டுவரச் சொல்லி ஜெயலலிதா படித்துப் பார்த்து விட்டு வாயை மூடிக் கொண்டிருப்பது நலம். மேலும் சிறப்புக் கொள்முதல்

திட்டத்தின்கீழ் 50 கோடி ரூபாய் அளவிற்கு சரக்குகள் கோவாப்டெக்ஸ் மூலமாக கழக ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்டது. ஏராளமான லுங்கிகள் விற்பனையில்லாமல் தேங்கிக் கிடந்ததை மனதிலே கொண்டு 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி 31-3-99 வரை அனுமதிக்கப்பட்டதும் கழக ஆட்சி யிலேதான்.

1994-1995, 1995-1996 ஆகிய ஆண்டுகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த தள்ளுபடி நிலுவை மானியத் தொகை சுமார் 40 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை கழக ஆட்சிக் காலத்திலேதான் 98-99இல் வழங்கப்பட்டது. 1995-96இல் கோவாப்டெக்சில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற விற்பனை 257 கோடி ரூபாய். 1999-2000இல் கழக ஆட்சியிலே அங்கே நடைபெற்ற விற்பனை 327 கோடி ரூபாய்.

இத்தகைய சாதனைகளை யெல்லாம்தான் "தவறான கொள்கைகள்" என்று ஜெயலலிதா கதை அளந்திருக்கிறார்.

**கேள்வி:-** *நெசவாளர்கள் யாரும் பட்டினியால் சாகவில்லை என்றும், வயதான காரணத்தினாலும் குடிப்பழக்கத்தினாலும்தான் இறந்தார்கள் என்றும் ஜெயலலிதா செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறாரே?*

**கலைஞர்:-** ராசிபுரம் சட்டப் பேரவை தொகுதியிலே இதுபோல்; பொய்த் தகவல்களை; மாற்றிக் கூறிய காரணத்தினால்தான் அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை

உறுப்பினரை தொகுதி மக்கள் 'கரோ' செய்தார்கள். கழக ஏட்டிலோ, கம்யூனிஸ்ட் கட்சி ஏட்டிலோ அல்ல; நடுநிலை நாளிதழ் ஒன்றுதான் "வறுமையின் கொடுமைக்கு 8 நெசவாளர்கள் பலி" என்ற தலைப்போடு ஒரு பக்க அளவிற்கு ஆதாரங்களோடு புகைப்படங்களோடு அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. எந்தெந்த ஊர்களிலே உள்ள நெசவாளர் சங்கங்கள் மூடிக் கிடக்கின்றன என்ற விவரத்தையும், இறந்தவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு அந்தச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் முதலமைச்சர் அதையெல்லாம் மறைத்துவிட்டு செய்தியாளர்களிடம் யாரும் பட்டினியால் சாகவில்லை என்று கூறியதோடு தேவையில்லாமல் தி.மு.க. மீதும் பாய்ந்திருக்கிறார்.

தி.மு.கழக ஆட்சியில் 60 வயதிற்குமுன் இறக்கும் நெசவாளர்களின் வாரிசுகளுக்கு நெசவாளர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 96–97இல் கழகம் பதவிக்கு வந்ததும் வராததுமாக 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாகவும், பிறகு 1999–2000இல் 40 ஆயிரம் ரூபாயாகவும், 1–4–2000 முதல் 50 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. மேலும் அதற்கான பங்குத் தொகை 5 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை முதலில் 8 ஆயிரம் ரூபாய் என்றும், பிறகு 10 ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தியதும் கழக அரசுதான். கழக ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டத்தின்கீழ் 324 நெசவாளர் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

நெசவாளர்களின் உற்பத்தி பொருள்கள் வாங்கப்பட வேண்டும் என்பதை மனதிலே கொண்டு இலவச வேட்டி சேலை திட்டம் ஒவ்வொரு ஆண்டும் கழக ஆட்சிக் காலத்திலே சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியிலே இந்தத் திட்டத்தையே ரத்து செய்ததின் காரணமாகத்தான் நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிகள் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 1995–96இல் ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள்தான் ஏற்றுமதி செய்யப்பட்டன. மாறாக தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1999–2000ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்ற இந்த ஒரு புள்ளி விவரத்திலிருந்தே நெசவாளர்கள் வாழ்வில் அக்கறை காட்டிய அரசு எது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எனவே கைத்தறியாளர்களின் கண்ணீரைத் துடையுங்கள் முதலில்; கதைகள் விடலாம் பிறகு! என்று அ.தி.மு.க. அரசுக்கு அறிவுறுத்துகிறேன்.

(கலைஞர் பதில்கள்)

3.8.2002



# அடையாள உதவி புரிய; அம்மையார்குப்பம்!

உடன்பிறப்பே,

“இலையே உணவிலையே கதி
இலையே எனும் ஏழ்மை
இனிமேலிலை எனவே
முரசறைவாய்!”
என்று புரட்சிக்கவிஞரும்;

“தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்”
என்று பாரதியாரும்

பாடி உலவிய இந்தப் பைந்தமிழ் நாட்டில்தான்; பல பகுதிகளில் பசி, பஞ்சம், பட்டினி ‘பாலையாகிவிட்டது நிலம்’ என்ற பரிதாபக் குரல்! நாவின் நுனியை ஈரமாக்கிக் கொள்ளவாவது ஒரு சொட்டு தண்ணீர் என்ற குமுறல்! அந்தக் குமுறல் கேட்டுக் கோபித்துக் குதிப்போரைத்தான் கோட்டையிலே காணமுடிகிறது; இந்த அவதியிலும் அவர்தம் அட்டகாசத்துக்கும் அடாவடிக்கும் அளவில்லை!

கண்ணீர் விட்டுக் கதறும் கைத்தறி நெசவாளர்களின் நிலை கண்டும் – அவர்கள் உழைக்கத் தயாராக இருந்தும் உயிர் பிழைக்க வேலையொன்றும் தென்படாத திண்டாட்டம் உணர்ந்தும் – பாடுபடத் தயங்கினோமில்லை; எம்மைப் பயன்படுத்திக் கொள்ளத்தான்

அம்மையார் ஆட்சியில் ஆயத்தச் செயல்களுமில்லை ஆக்கப்பூர்வ பணிகளுமில்லை; என்று நெசவாளர்கள் சிந்தை மிகநொந்து கிடக்கின்றார் – வருவார் வருவார் என்று எதிர்பார்த்தும் நிவாரணம் ஏதேனும் நிறைவாகத் தருவார் தருவார் எனத் தவங்கிடந்தும்; ஏமாற்றமடைந்து தவித்திட்ட நிலையில் ஊரார் கண்டு உளமுருகி; காய்ந்து கருகிடும் கைத்தறியாளர் குடும்பங்களுக்குக் கஞ்சித் தொட்டியாகிலும் திறப்போம் என்று முன்வந்தபோது – முற்றாக நிலைமை நெசவாளர் வீடுகளில் கெட்டுவிட்டது என்பதுணர்ந்து; அரசு முயற்சி எள்ளளவும் எட்டிப் பார்க்கவுமில்லை எனக் கேள்வியுற்று, தட்டிக் கேட்கும் எதிர்வரிசையில் இருக்கும் நாம்; பிரச்சினை பொது என்பதால் அரசுக்கு ஆதரவாக கைத்தறியாளருக்குக் கை கொடுப்போம்; அரசும் நன்றியுடன் நம்மைப் பாராட்டுமென்று கருதி கழக அமைப்புக்களை வேண்டி தேவைப்படும் பகுதிகளில் கஞ்சித் தொட்டிகளைத் திறக்கச் சொன்னோம்.

போர்க்களத்தில் மோதிக் கொண்ட இருதரப்பு வீரர்களிடம்கூட வேற்றுமை பாராட்டாமல் இரு சாரார்க்கும் உணவு படைத்த பெருஞ்சோற்று உதியலாதன் நமது தமிழர் மூதாதையென்பதால் அவ்வுணர்வு பட்டுப்போகாமல் இருக்கின்றது என்ற காரணத்தினால்தான் பசியோடு போராடுகிறவர்கள் துயர் துடைத்திட நம்மாலியன்ற வகையில் துணை நிற்கச் செய்தோம்.

சீனப்போரின்போது பெருந்தலைவர் காமராசரிடம் யுத்தநிதி கழகச்சார்பில் வழங்கினோம்.

பாகிஸ்தானுடன் பாரதம் மோதியபோது பக்தவத்சலனாரிடம் போர்நிதி அளித்தோம்.

பங்களாதேஷ் சண்டையின்போதும் பிரதமர் இந்திராகாந்தியிடம் பெருநிதி வழங்கினோம்.

நமது கூட்டணியில் இல்லாதபோதே இந்தக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் நாம் வழங்கிய நிதியை – அளித்த உதவியை – தந்திட்ட தார்மீக ஆதரவை – தட்டிக் கழிக்கவுமில்லை! வெட்டிப் பேசவுமில்லை! நன்றி நவின்றனர்! நாகரீகம் காத்தனர்!

நாகை, தஞ்சைப் பகுதியில் பெருவெள்ளம் வந்த போதும் அப்படித்தான்! தேங்கிக் கிடந்த கைத்தறியாடைகளை அண்ணாவும் நானும் மற்றவர்களும் 1953ல் தோளில் சுமந்து விற்று, வெள்ள நிவாரண நிதிக்கும் கைத்தறி ஆடைகளையே வாங்கி அன்றிருந்த காங்கிரஸ் அரசிடம் கொடுத்தோம். அந்த அரசும் அதனை வாங்க மறுத்திடவில்லை!

ஆனால் இன்றோ; நாம் கஞ்சி வழங்குகிற இடங்களில் எல்லாம் அ.தி.மு.க.வினர் போட்டி மனப்பான்மையுடன் – வெறுப்பும் மறுப்பும் குழைத்து – பிரியாணி முட்டை வழங்குகிறார்களாம்!

பரவாயில்லை; நாம் கஞ்சி வழங்கிட முன் வந்ததால்; நெசவாளர் சகோதர சகோதரிகளுக்கு பிரியாணியாவது கிடைக்கிறதே!

நம்மால் வழங்க முடிந்தது கஞ்சிதான் – நம் வசதிக்கு இதுதான் முடிகிறது. புராணக் கதைப்படி பார்த்தால்; கண்ணனுக்கு குசேலர் கொண்டு போன புல்லரிசி அவல் போல!

ஆம்; அன்புடன் – நட்புணர்வுடன் – பாசத்துடன் – நேசத்துடன் தருவது!

போட்டியில் பொன்னும் பொருளும் பிரியாணியும், விருந்தும் நெசவாளர்க்கு கிடைத்தால் மகிழ்ச்சி! இரட்டிப்பு மகிழ்ச்சி!

எளிய முறையில் இதயம் மலர்ந்து இன்முகம் காட்டி எமை வரவேற்கும் அந்த ஏழை ''இறைவன்''களைக் காணவும் – அவர்களுடன் கஞ்சியருந்தி ஆறுதல் கொள்ளவும் இத்திங்கள் ஆறாம்நாள் அம்மையார் குப்பம் செல்கிறேன்.

அடையாள உதவி புரியத்தான்!
அரசின் நிறைவான உதவிக்கு
வழி காட்டத்தான்!

4.8.2002 அன்புள்ள,

முரசொலி **மு.க.**



# வேறென்ன சொல்லத் தோன்றுகிறது!

உடன்பிறப்பே,

ஒய்வுக்காக வந்திருந்த போதிலும் "உண்மை மறைப்போர்" "பொய் வாரி இறைப்போர்" கூத்துக்கள் தமிழ்நாட்டு எல்லை கடந்தும் தாவிப் பாய்வது காணும்போது தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியினர்க்கு என்ன சொன்னாலும் அவர்கள் தமது கேளாக் காதையே திருப்புவர் என்பதால் சிந்திக்கும் திறனுடையார் – "பத்திரிகைப் பெண்ணே" என்று பாவேந்தர் பாரதிதாசனார் விளித்ததற்கேற்ப அத்தகைய நற்பெண்ணின் பண்புடன் நடத்தப்படும் பத்திரிகையாளர்களுக்காக சில சொல்லவும் கேட்கவும் விரும்புகிறேன்.

தமிழக நெசவாளர்கள், அரசின் இலவச வேட்டி சேலைத் திட்டத்தையே கருவறுத்துக் கைவிட்டு விட்ட காரணத்தாலும் – அரசின் அலட்சியப் போக்கினாலும் – அல்லலுக்கு ஆளாகி, தெற்கு மாவட்டங்களில் நெசவாளர் பகுதிகளில் பசியும் பட்டினியுமாய் வாடியது கண்டு, கஞ்சித் தொட்டிகள் அந்தப் பகுதி மக்களால் அமைக்கப்பட்டன. பொதுப் பிரச்சினைகளில்; அதுவும் நிவாரண உதவிகளில் அரசுடன் ஒத்துழைப்பது என்ற எதிர்க்கட்சிக்குரிய ஆக்கப்பூர்வமான இலக்கணத்துக்கேற்ப கஞ்சி வழங்கி நெசவாளர்களின் அன்றாடத் துன்பம் நீக்கிட தி.மு.க. அமைப்புக்களின் சார்பிலும் அவர்களுக்குக் கஞ்சி வழங்குமாறு ஜூலை மாதம் 28ந்தேதி வேண்டுகோள் அறிக்கையொன்றை வெளியிட்டேன்.

நாகரிகமான அரசு என ஒன்று இருந்திருந்தால் நமது பணியும் நலிந்த மக்களுக்குத்தானே எனக் கருதி அதனை வரவேற்றிருக்கும். ஆனால் இந்த அரசின் தலைவியான ஜெயலலிதா உடனடியாக என்மீது வசைமாரி பொழிந்து மிக இழிவான வார்த்தைகளைக் கொட்டி ஜூலை 29 மாலை ஏடுகளில் ஒரு அறிக்கை வெளியிட்டதோடு ஜூலை மாதம் 25ந்தேதியே அமைச்சரவைக் கூட்டத்தில் நெசவாளர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் தீட்டிவிட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

எனது கேள்வியெல்லாம் இதுதான்; நெசவாளருக்கு அரசு நிவாரண உதவிகள் செய்யும் கடமையை ஆற்றினால்; அதையொட்டி அந்த நெசவாளர்களின் பசி போக்க கஞ்சி வழங்குவது பாபச் செயலா? தேசத் துரோகமா? அல்லது இதுவும் "பொடா" சட்டத்தின்படி தடுக்கப்பட்டுள்ள காரியங்களில் ஒன்றா?

எனது அடுத்த கேள்வி; ஜூலை 25ந்தேதியே அமைச்சரவையில் நெசவாளர் நிவாரணத்துக்கான திட்டம் தீட்டப்பட்டு முடிவெடுத்திருந்தால்; அது உண்மையானால் அதை அன்றைக்கே அறிவிக்காமல் – மிக அவசியமும் அவசரமும் வாய்ந்த அந்த முடிவை; ஜூலை மாதம் 29ந்தேதி வரையில் கிடப்பிலே போட்டிருந்த காரணம் என்ன? 29 மாலையில் வெளியிட்டது ஏன்?

ஜூலை மாதம் 28ந்தேதி நான் வேண்டுகோள் அறிக்கை வெளியிட்டு கஞ்சித் தொட்டிகள் திறக்க

கழக அமைப்புகளைக் கேட்டுக் கொள்ளும் வரையில் ஜூலை 25 அன்று அமைச்சரவையில் முடிவெடுத்திருந்தால் அந்த முடிவை குறட்டை விட்டுத் தூங்க வைத்த மர்மம் என்ன? இதுபற்றி விமர்சித்துள்ள 'இந்து' கட்டுரையாளர் நண்பர் 'ஜெயந்த்'தாவது விளக்குவாரா?

கடந்த கால ஆட்சிகளில் இப்படி நெருக்கடியான நேரங்களில் நிவாரண உதவிக்கான முடிவுகளை அமைச்சரவை எடுத்தால்; அந்த அமைச்சரவைக் கூட்டம் முடிந்தவுடனேயே பத்திரிகை நிருபர்களுக்கு அறிவிப்பதுதானே வழக்கம்!

அந்த வழக்கத்திற்கு மாறாக இடையில் நான்கு நாட்கள் பொறுத்திருந்து; கழகச் சார்பில் நான் வேண்டுகோள் விடுத்த பிறகு வாரிச் சுருட்டி எழுந்திருந்து என்மீது வசைபாடியது குறித்தும்; கழகச் சார்பில் நெசவாளருக்கு கஞ்சி வழங்கும் இடங்களில் எல்லாம் ஆளுங்கட்சி 'தாதா'க்களை முன்னிறுத்தி அமைச்சர் களைப் பின் நிறுத்தி, அ.தி.மு.க. சார்பில் முட்டையும் பிரியாணியும் வழங்கியது ஏடாகூடமல்லவா? ஏட்டிக்குப் போட்டியல்லவா?

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்குக் கழக ஆட்சியில் வாரம் ஒரு முட்டை வழங்கியதை நிறுத்தி விட்ட இந்த அரசின் இரக்கமற்ற இதயத்துக்கு; இப்போது மட்டும் பிரியாணியுடன் முட்டை வழங்க தோன்றியது என்பது; துப்பு கெட்ட செயல்தானே!

இந்த உண்மைகளையெல்லாம் புரிந்திருந்தும் புரியாதவைகளைப் போல சில ஏடுகளில்; நெசவாளர்களைப்

பற்றிக் கவலைப்படாமல் "தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கஞ்சித் தொட்டியா? பிரியாணி முட்டையா? என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன" என்று விமர்சிக்கின்ற வேதனையான வேடிக்கையைக் காண முடிகிறது!

உண்மையிலேயே பத்திரிகா தர்மத்தில் அக்கறை யுள்ளவர்கள் பதில் சொல்லட்டும்!

என்னதான் நாட்டில் நடந்தாலும், எத்தனை ஏழை விவசாயிகள் மற்றும் நெசவாளிகள் வேலையின்றி விழிநீர் வடித்தாலும் – பட்டினி கிடந்தாலும்; பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற தி.மு. கழகம் ஏன் என்று கேட்கக் கூடாது என்கிறீர்களா?

நெசவாளர் துயரத்தை ஒரு எதிர்க்கட்சி நிரந்தர மாகத் துடைத்து விட முடியுமென்று எண்ணியா அடையாளபூர்வமாக கஞ்சி வழங்கும் பணியில் தி.மு.க. தன்னையும் இணைத்துக் கொண்டது?

இல்லையே! அரசாங்கத்தின் கவனத்தை நெசவாளர் பக்கம் – விவசாயிகள் பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காகத்தானே? இது என்ன ராஜ துவேஷ குற்றமா?

இதை உணர்ந்தும் உணராதவர்களைப் போல; பத்திரிகை நடத்துவோர் சிலர் – கஞ்சி வழங்குதலும் – பிரியாணி முட்டை வழங்குதலும் – ஒரே மாதிரியான கண்ணோட்டத்திற்குரியவை என விமர்சிப்பது என்ன நியாயம்?

இந்த ஏடுகளின் ஆசிரியர்கள்; அல்லது ஏடுகளில் எழுதுவோர் – யாராயினும்; நான் அம்மையார்குப்பம்

நெசவாளிகளுக்கு கஞ்சி வழங்கத் தேதி குறித்தபிறகு; அதே நாளில் அதே ஊரில் அதே நேரத்தில் அ.தி.மு.க.வினர் போலீஸ் படையின் துணையுடன் போட்டிக்காக பிரியாணி முட்டை வழங்குவதாக அறிவித்ததைக் கண்டித்தது உண்டா? தவறு என எழுதியதாவது உண்டா?

நமது நிகழ்ச்சியால் – அதை எதிர்க்கும் அ.தி.மு.க.வின் அசிங்கமான போட்டி நிகழ்ச்சியால் அந்த சிறிய ஊரில் பெரிய கலவரம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக கழக நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டேனே; அதையாவது பாராட்டும் மனப்பக்குவம் அந்தச் சில ஏடுகளுக்கு இருந்ததா? மனமிருந்தால் தானே பக்குவம் இருந்திட!

அது என்னவோ; அ.தி.மு.க.வையும் தி.மு.க. வையும் இணைத்து இணைத்துத்தான் குறை எழுதுவார்கள்! அவ்வளவு குறுகிய உள்ளம்! அதற்குப் பெயர் நடுநிலையாம்! அதாவது நியாயம் எது? அநியாயம் எது? என்று பகுத்துப் பார்க்காமல் தமது விருப்பத்திற்கேற்ப விமர்சிப்பதுதான் நடுநிலை போலும்!

“இந்த நடுநிலை நாசமாய்ப் போக!” என்று சொல்வதைத் தவிர; வேறென்ன சொல்ல இருக்கிறது! அதைத் தவிர வேறென்ன சொல்லத்தான் தோன்றுகிறது!

**9.8.2002** அன்புள்ள,

முரசொலி **மு.க.**



## பசி போக்கிட இடமல்ல முக்கியம்; பாசமுள்ள இதயம்தான் முக்கியம்!

உடன்பிறப்பே,

நெசவாளர்களின் தற்போதைய அவல நிலைக்குக் காரணம் கடந்த ஐந்தாண்டு கால தி.மு.கழக ஆட்சிதான் என்று ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவித்திருந்தார். ஜெயலலிதாவின் காவல்துறை மதுரையிலே நடத்திய அராஜகங்களைக் கண்டிக்க முற்பட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்களும் தனது அறிக்கையிலே நெசவாளர்களின் நிலை கடந்த பத்தாண்டு காலத்தில்தான் பாதிக்கப்பட்டது என்று எழுதியிருக் கிறார். கழக அரசையும் இணைத்து சாட்டப்பட்ட இந்தக் குற்றச்சாட்டிற்கு எந்தவிதமான ஆதாரபூர்வமான புள்ளிவிவரங்களும் தரப்படவில்லை. ஜெயலலிதாவின் குற்றச்சாட்டிற்கு அவர் அறிக்கை வெளியிட்ட நாளுக்கு மறுநாளே நான் புள்ளி விவரங்களோடு பதில் அளித்திருந்தேன். அதற்குப் பிறகு அவர்கள் தரப்பில் வழக்கம்போல் எந்தவிதமான பதிலும் இல்லை. ஆனால் அந்த இரண்டு கருத்துக்களையும் படித்துவிட்டோ அல்லது படிக்காமலோ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கழக அரசின் மீதும் குற்றச்சாட்டினை சுமத்தியிருக்கின்றது.

கழக ஆட்சியின்போது கைத்தறித் துறையின் அமைச்சராக இருந்த என்.கே.கே. பெரியசாமி தனது பொறுப்பில் இருந்த அந்தத் துறையிலே செய்யப்பட்ட சாதனைகளையெல்லாம் 17 பக்கங்களில் ஒரு நீண்ட தொகுப்பாக என்னிடமளித்து, அதைப் படித்துவிட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கம் அளித்து கடிதம் எழுதிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். 17 பக்கங்களில் அவர் தந்த புள்ளிவிவரங்களிலிருந்து எடுத்த விவரங்களைத்தான் இன்றைய கடிதத்தில் எழுதியிருக்கின்றேன்.

என் கடிதங்களைப் படிக்கும் ஆர்வமுள்ள கழகச் சொற்பொழிவாளர்கள் இதையும் படித்து, கழகத்தின் சார்பில் வரும் 19ஆம் தேதி நடைபெறவிருக்கின்ற கண்டனப் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1953ஆம் ஆண்டிற்கு முன்பு கூட்டங்களிலே உரையாற்றுபவர்களுக்கு மாலைகள் அணிவிப்பது தான் வழக்கமாக இருந்தது. நெசவாளர்களின் துயரைத் துடைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு தேங்கிக் கிடந்த கைத்தறி துணிகளை அண்ணாவும், நானும் மற்றும் கழக முன்னணியினரும் தோளிலும் தலையிலும் சுமந்து தெருக்களில் விற்றபோதுதான்; இனிமேல் கூட்டங்களில் உரையாற்றுவோருக்கு மாலைக்குப் பதிலாக கைத்தறி ஆடைகளை வாங்கி அணிவித்திட வேண்டும் என்ற புதிய முறையையே கழகம் அறிமுகப்படுத்தியது.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்வில் வளம் சேர்க்க வேண்டுமென்ற குறிக்கோளோடுதான் எம்.ஜி.ஆர்.

ஆட்சிக் காலத்தில் இலவச வேட்டி சேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு; தொடர்ந்து 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் கழக ஆட்சியிலும் சிறப்பாக அமல்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அத்திட்டத்தை பாழ்படுத்தும் வகையிலே ஜெயலலிதாவின் 1991–1996 வரையிலான முந்தைய ஆட்சிக் காலத்திலே கைத்தறி நெசவாளர்களிடமிருந்து அவர்கள் உற்பத்தி செய்த துணியைக் கொள்முதல் செய்யாமல் கோவாப்டெக்ஸ் மூலம் 12 கோடி ரூபாய் ரொக்கமாக எடுத்துச் சென்று ஆந்திராவிலிருந்து தரமற்ற, அளவு குறைந்த, மொத்தமாக 2 கோடி ரூபாய் கூட மதிப்பில்லாத, வேட்டி சேலைகளை விசைத்தறியில் உற்பத்தியானவற்றை கொள்முதல் செய்து இலவச வேட்டி சேலைத் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொண்ட கொடுமையும் நடைபெற்றது.

1996இல் மீண்டும் கழக ஆட்சி ஏற்பட்டது முதல் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் உரிய நேரத்தில் நூலும், அதற்குரிய ஊதியமும் அளித்து தொடர்ந்து ஐந்தாண்டு காலம் நல்ல தரமான வேட்டி சேலைகள் உற்பத்தி செய்யும் வாய்ப்பை வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள நெசவாளர்களுக்கு அளித்து அவர்களின் நலன் பாதுகாக்கப்பட்டது. 30 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் செய்த உற்பத்தி போக மீதமுள்ள தேவைக்கு மட்டும் கழக ஆட்சியிலே விசைத்தறி கூட்டுறவு சங்கத்தில் கொள்முதல் செய்யப்பட்டது.

கைத்தறி நெசவாளர்கள் நெய்யக்கூடிய பகுதிகளில் எந்த ரகம் நெய்கின்றார்கள் என்று கவனித்து ஆண்டிப்பட்டி, ஜக்கம்பட்டி, திருவில்லிப்புத்தூர், திண்டுக்கல், ராசிபுரம்,

திருச்செங்கோடு பகுதிகளில் இலவச வேட்டி சேலை உற்பத்தியை கழக அரசு தொடங்கி நெசவாளர்களின் துயரைத் துடைத்தது.

1996ஆம் ஆண்டு வரையில் ஜெயலலிதாவின் ஆட்சியில் கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் இழப்பு 7 கோடியே 28 இலட்சம் ரூபாய்.

தி.மு.கழக ஆட்சியில் 1996–97இல் பத்து இலட்ச ரூபாயும், 97–98இல் 20 இலட்ச ரூபாயும், 98–99இல் ஒரு கோடியே 36 இலட்சம் ரூபாயும், 1999–2000இல் ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாயும் என்ற வகையில் தொடர்ந்து இலாபத்தை அதிகப்படுத்தி மொத்தம் 2 கோடியே 71 இலட்சம் ரூபாய் இலாபம் என்ற அளவிற்கு ஆக்கியிருந்தோம்.

ஆனால் இன்றைய ஜெயலலிதா ஆட்சியில் 2001–2002இல் கோவாப்டெக்ஸின் இழப்பு பல கோடி ரூபாயாகும். எனக்குத் தெரிந்த வரையில் இது சுமார் 15 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கலாம். இந்த இழப்பு அடுத்த ஆண்டு இன்னும் பல கோடி ரூபாயாகப் பெருகும்.

கோவாப்டெக்ஸ் நிறுவனத்தில் தற்போதுள்ள நிலவரப்படி பல விற்பனை நிலையங்களில் விற்பனை இல்லை.

அங்கே பணிபுரியும் அலுவலர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூட முடியாத நிலை.

பல விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இதற்கெல்லாம் முக்கிய காரணம் ஜெயலலிதா ஆட்சியிலே கைத்தறி துணிகளை கொள்முதல் செய்வதற்குப் பதிலாக விசைத்தறி உற்பத்தியைக் கொள்முதல் செய்யத் தொடங்கியதுதான்! இந்த மாற்றத்தினால் யார் யார் எவ்வளவு பயன்பெற்றார்கள் என்பதெல்லாம் விசாரணைக்கு உரியவைகளாகும்.

கழக ஆட்சிக் காலத்தில் ஒரு முறை ஆரணி, பரமக்குடி போன்ற பகுதிகளில் அளவும், ஜரிகை தரமும் குறைவான சேலைகள் தேங்கிக் கிடந்த போது, அந்தப் பகுதி நெசவாளர்களின் நலன்கருதி ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு அவைகளைக் கொள்முதல் செய்த காரணத்தால், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. சோ.பாலகிருஷ்ணன் அவர்கள் தனது தொகுதியில் சௌராஷ்டிர இன மக்களுக்கு ஏற்பட்ட நலிவை நிரந்தரமாக நீக்கி வைத்தீர்கள் என்று என்னிடமே பாராட்டினார்.

வேலூர், குடியாத்தம், செங்கற்பட்டு ஆகிய பகுதிகளில் வாழும் நெசவாளர்களின் நலன் கருதி, லுங்கி ரகங்களுக்கு என்றே சிறப்பு சலுகை கழக ஆட்சியிலே வழங்கப்பட்டது. சிறப்புத் தள்ளுபடி மானியம் 30 சதவிகிதம் என்று உயர்த்தப்பட்டதும் கழக ஆட்சியிலேதான்.

1991–1996ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியில் நெசவாளர் சங்க உறுப்பினர்கள் நான்கு இலட்சம் பேர் என்று கணக்கு காட்டப்பட்டு தள்ளுபடி மானியம் பெறப்பட்டது. ஆனால் கழகம் ஆட்சிக்கு வந்தபின்னர் உண்மையாக நெசவாளர்கள் யாரென்று பார்த்து அடையாள அட்டை வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்டபோது

ஒன்றரை லட்சம் பேர்தான் கூட்டுறவு சங்கங்களிலே உண்மையாக பதிவு செய்து கொண்டுள்ளார்கள் என்பது தெரியவந்தது. போலியான உறுப்பினர்கள் களையப்பட்ட காரணத்தால் உண்மையான நெசவாளர்கள் அதிகப் பயனடையும் நிலை கழக ஆட்சியிலே ஏற்பட்டது.

தி.மு.கழக ஆட்சி 1996ஆம் ஆண்டு பொறுப்பேற்றதும் கைத்தறியாளர்களின் நிலையை அறிந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அ.தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்டு குழு ஒன்று அமைத்து, அந்தக் குழு நெசவாளர் பகுதிகளுக்கெல்லாம் நேரில் சென்று பரிசீலித்து அளித்த 24 பரிந்துரைகளையும் உடனடியாக ஏற்றுக்கொண்டு அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்ததோடு, நெசவாளர்களுக்காக வேறு ஏதாவது பரிந்துரைகள் உள்ளதா என்று கேட்டவன்தான் நான்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த, அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்த பெருந்துறை சட்டப்பேரவை உறுப்பினர் திரு. நா. பெரியசாமி அவர்கள் முதல்வர் அறையிலே என் கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி கூறிய நிகழ்ச்சி என் மனக்கண் முன்னால் இன்றளவும் நிழலாடுகிறது.

நெசவாளர் சங்கம், ஜவுளித் துறை, நூற்பாலை ஆகியவற்றில் ஜெயலலிதா ஆட்சியில் ஏற்பட்ட முறைகேடுகளையும், நிர்வாகச் சீர்கேடுகளையும் அகற்றியதுடன் அவற்றை உரிய முறையில் ஒழுங்குபடுத்தி, தொலைநோக்குப் பார்வையோடு திட்டமிட்டு, பல துறை

நிபுணர்களோடு ஆராய்ந்து தமிழகத்திற்கென்று தனியாக ஒரு ஜவுளிக் கொள்கை வகுக்கப்பட்டதும் கழக ஆட்சியிலே தான்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் பத்து சதவிகிதம் தான் தள்ளுபடி மானியம் ஆண்டுக்கு 100 நாட்களுக்கு மட்டும் தரப்பட்டு வந்தது.

1996ல் நான் முதல்வராகப் பொறுப்பேற்றதும் ஆண்டு முழுவதற்கும் பத்து சதவிகிதம் தள்ளுபடி மானியம் என்று அறிவித்து அவ்வாறு அளிக்கப்பட்டது.

அதற்குப் பிறகும் நெசவாளர் வாழ்வில் அல்லல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டவுடன் தள்ளுபடி மானியத்தை 20 சதவிகிதமாக உயர்த்தியதோடு,

அந்த 20 சதவிகித தள்ளுபடி மானியம் ஆண்டு முழுவதற்கும் தரப்படும் என்றும் அறிவித்தேன்.

60 வயது நிரம்பிய நெசவாளர்களுக்கு மாதம் 250 ரூபாய் ஓய்வூதியம் என்று அறிவித்து, அளித்ததும் கழக அரசுதான்.

ஏழை நெசவாளர்கள் இறந்துவிட்டால், அவர்களது குடும்பத்திற்கு நிவாரண நிதி 15 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியதும் கழக அரசுதான்.

கழக ஆட்சிக் காலத்திலேதான் கைத்தறி நெசவாளர்களுக்காக மத்திய அரசு ஒதுக்கிய மானியத்

தொகையில் 54 சதவிகிதம் தமிழகமே பெற்றது. எஞ்சிய அனைத்து மாநிலங்களுக்கும் 46 சதவிகித அளவுதான் மத்திய அரசு ஒதுக்கிய மானியத் தொகை கிடைத்தது.

கழக ஆட்சிக் காலத்தில் ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு திட்டம் தீட்டி செயல்பட்டதின் காரணமாக 300 தறிகள் ஓடிய இடங்களில் 1000 தறிகள் ஓடுகின்ற நிலை ஏற்பட்டது.

சுமார் 200 சங்கங்கள் ஏற்றுமதியாளருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இலாபத்தை பெருக்கின.

ஆனால் தற்போது அந்த ஏற்றுமதி உற்பத்தி 80 சதவிகிதம் குறைந்து வாரத்தில் ஒருநாள், இரண்டு நாள்தான் நெசவாளர்கள் தறியில் பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணத்திற்கு ஒன்று கூறவேண்டுமேயானால், சென்னிமலை சென்கோவாப்டெக்ஸில் 300 தறி இருந்த இடத்தில் 1300 தறிகள் என்று கழக ஆட்சியின்போது உயர்ந்து இரவு பகலாக உற்பத்தி செய்து வந்த நிலை மாறி, தற்போது அங்கே நெசவாளர்களுக்கு கூலி கொடுக்கக் கூட முடியாமல் உள்ளது.

கழக ஆட்சியிலே நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து வந்த ஏற்றுமதியாளர்கள் தற்போது தனியாரிடம் அந்தப் பொறுப்பை மாற்றிவிட்டார்கள்.

கழக ஆட்சியில் ஏற்றுமதியாளர்களுக்கு இந்தியாவிலேயே தமிழகம்தான் நம்பிக்கைக்குரிய மாநிலமாக காட்சி அளித்தது. ஆனால் தற்போது ஏற்றுமதியாளர்களுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மீதிருந்த நம்பிக்கை போய்விட்டது என்பதற்கு யார் காரணம் என்பதை ஜெயலலிதாவும், அரசியல் ஆதாயங்கருதி அவருக்கு மறைமுகமாக வக்காலத்து வாங்குகிற சில கட்சித்தலைவர்களும் உணர்ந்து பார்க்க வேண்டும்.

இந்தியாவிலேயே கழக ஆட்சிக் காலத்தில்தான் நெசவாளர்களுக்காக சென்னிமலையில் ஒரே இடத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் கட்டித் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டு, பணிகளும் தொடங்கப்பட்டு தற்போது முடிவடையும் நிலையிலே உள்ளன என்பதையும் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அந்த கைத்தறி நெசவாளர்கள் பசி பட்டினியுடன் தவிக்கும் கொடுமையைக் கண்டு உள்ளம் உருகித்தான் அவர்களுக்குக் கழக அமைப்புகளின் சார்பில் கஞ்சி வழங்கிட வேண்டுகோள் விடப்பட்டது. அதனால் ஆத்திரமடைந்துள்ள அ.தி.மு.க. ஆட்சியும், ஆளுங் கட்சியினரும் ஏட்டிக்குப் போட்டியாக செயல்பட்டு அராஜகம் விளைவிப்பதை உணர்ந்தும் உணராதவர்களைப் போல; இது ஏதோ தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்குமிடையே

நடக்கும் "லாவணி" என்று அரசியல் கண்ணோட்டத்துடன் விமர்சிப்போரின் போக்கு கண்டு மனம் நொந்து மிகவும் வேதனைப்படுகிறேன்.

எனவே பாதிக்கப்பட்டுள்ள ஏழை நெசவாளர்களுக்கு ஊரின் தெருக்களிலோ, பொது இடத்திலோ கஞ்சி வழங்க ஏற்பாடு செய்யாமல் கஞ்சியோ, உணவோ, வழங்க வேண்டிய தேவையுள்ள பகுதிகளில் கழக அலுவலகத்திலோ அல்லது திருமண மண்டபங்களிலோ வழங்கிட வேண்டுமெனக் கழக அமைப்புகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகைகளில் நல்லெண்ணம் கொண்ட சில வாசகர்கள் எழுதியுள்ள கடிதங்களில் காணப்படும் கருத்தின் அடிப்படையிலேயே தலைமைக் கழகம் இந்த முடிவை மேற்கொண்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டினி கிடப்போர் பசிபோக்க இடமல்ல முக்கியம்; பாசமுள்ள இதயம்தான் முக்கியம்!

14.8.2002 அன்புள்ள,

முரசொலி **மு.க.**



# பச்சைக்கொடி எது?
# பச்சைப் பாம்பு எது?

உடன்பிறப்பே,

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற என்னுடைய சூளுரை கவிதையை கூட்டம் தவறாமல் நினைவுகூர்ந்து முழங்கியும், அறிக்கைகள் தவறாமல் சுட்டிக் காட்டியும் வருகிற புரட்சிக் கலைஞர் தம்பி விஜயகாந்த் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுடைய கண்ணீரை தன்னால் இயன்ற அளவு துடைப்பதற்காக பத்து இலட்ச ரூபாய்க்கு கைத்தறி ஆடைகளை வாங்கி ஏழைகளுக்கு இலவசமாக வழங்குவதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

கைத்தறியாளர்களுக்காக ஐம்பதாண்டுகளுக்கு முன்பிருந்தே, குறிப்பாக 1953ஆம் ஆண்டு, தலைவர் அண்ணா உள்ளிட்ட திராவிட முன்னேற்றக் கழக முன்னணியினர் கைத்தறி துணிகளை தோளிலும், முதுகிலும் சுமந்து வீதிவீதியாக விற்று, அந்தக் காலத்திலேயே இலட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்பனை செய்து கைத்தறியாளர்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தமிழக அரசின் கவனத்தை கைத்தறியாளர்கள் மீது ஈர்க்கவும் பணியாற்றிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வகையில் தம்பி விஜயகாந்தின் இந்தப் பணியைப் பாராட்டுகின்ற உரிமையும் தகுதியும் தி.மு. கழகத்திற்கு உண்டு என்பதால் பாராட்டி வரவேற்கிறேன்.

ஒரு அரசாங்கம் முன் நின்று நடத்த வேண்டிய காரியங்களை விஜயகாந்த் போன்ற தனிப்பட்டவர் களோ, எதிர்க்கட்சியிலே உள்ள தி.மு.க. போன்ற ஒரு கட்சியோ முழுமையாக நிறைவேற்றிவிட முடியாது. ஆனால் அதற்கு மாறாக அரசாங்கத்தையே பொறுப்பு கட்டாமல், தம்மால் இயன்ற உதவிகளையும் பாதிக்கப்பட்டோருக்குச் செய்வதுதான் ஜனநாயகத் தில் ஏற்புடைய வழியாகும். அந்த வழியைப் பின்பற்றித்தான் அண்மையில்கூட தி.மு.கழகம் பட்டினி பசியால் பரிதவித்த நெசவாளர்கள் பகுதிகளில் அவர்களுக்கு கஞ்சி வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது.

அதுகூட திருவில்லிப்புத்தூர் போன்ற நெசவாளர் பகுதிகளில் நெசவாளர்களுடைய பட்டினி சாவுகளைப் பார்த்த பொதுமக்களேதான் நெசவாளர்களுக்கு கஞ்சி வழங்கும் திட்டத்தை முதலில் ஆரம்பித்தார்கள். பொதுமக்களின் ஒரு அங்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வகையில் அந்தக் கழகம் ஆட்சியில் இருந்தபோது கைத்தறியாளர்களுக்காக ஆற்றிய கடமைகளையும், சாதனைகளையும் இப்போது ஆட்சியில் இல்லாத காரணத்தால் தொடர முடியாத நிலையில் 'பொன் வைக்கும் இடத்தில் பூ வைப்பது போல' நாமும் கஞ்சி வழங்குகின்ற பணியை கைத்தறியாளர்கள் வாழும் பல பகுதிகளில் தொடங்கி தொடர்ந்து நடத்தினோம்.

நாம் கஞ்சி வழங்குவதாக அறிவித்தவுடன் முதலமைச்சர் ஜெயலலிதா அடக்கமுடியாத ஆத்திரங் கொண்டு இழிசொற்களால் என்னை அர்ச்சித்து ஒரு நீண்ட அறிக்கையை பத்திரிகைகளில் வெளியிட்டார்.

நான் அதைப்பற்றி ஆத்திரப்படாமல் அதற்கும் மென்மையாகவே பதிலளித்து கழக அமைப்புகள் மேற்கொண்டு கஞ்சி வழங்கும் பணியை தேவைப்பட்ட நெசவாளர் பகுதிகளில் ஆற்றிடுமாறு கேட்டுக் கொண்டேன்.

உடன்பிறப்பே, அம்மையார்குப்பம் என்ற ஊரையும் அதைச் சுற்றியுள்ள பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை போன்ற ஊர்களையும் நீ அறிந்திருக்கக் கூடும். நெசவாளர்கள் நிறைந்த வட்டாரம். கைத்தறியாளர்களுக்காக ஒரு காலத்தில் தி.மு.கழகம் அங்கே ஒரு மாநாடு கூட நடத்தியிருக்கிறது. அங்குள்ள நெசவாளர் பெருமக்களுக்கு நான் மிகவும் நெருங்கிய தொடர்புடையவனாக அன்றைக்கும் இருந்திருக் கிறேன், இன்றைக்கும் இருக்கிறேன். அங்குள்ள கழக நிர்வாகத்தினர் என்னைச் சந்தித்து குறிப்பாக மாவட்டக் கழகச்செயலாளர் தம்பி சிவாஜி, துணைப் பொதுச்செயலாளர் தம்பி சுந்தரம் போன்றவர்கள் அம்மையார்குப்பத்தில் நெசவாளர்களுக்கு கஞ்சி வழங்க நானே வர வேண்டுமென்று கேட்டார்கள்.

ஆகஸ்ட் 6ஆம் தேதி நான் நான்கு நாள் ஓய்விற்காக பெங்களூர் செல்வதாக இருந்த காரணத்தால் செல்லும் வழியில் அம்மையார்குப்பம் வருவதாக ஒப்புதல் அளித்திருந்தேன். உடனடியாக போட்டி போட்டுக் கொண்டு "கருணாநிதி வந்து கஞ்சி வழங்கினால், நாங்கள் முட்டை பிரியாணி விருந்து அதே இடத்தில், அதேநாளில், அதே நேரத்தில் நடத்துவோம்" என்று அ.தி.மு.க. முன்னணி யினரும் சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவித்தனர். அத்துடன் அவசர அவசரமாக அரசாங்க சார்பில் அமைச்சரும் அதிகாரிகளும் சென்று அங்குள்ள

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கைத்தறி துணிகளை கொள்முதல் செய்தார்கள். அது எனக்கு மகிழ்ச்சி ஊட்டக்கூடிய விஷயம். நாம் அறிவித்த அடையாள நிகழ்ச்சியால் தானே தேங்கிக் கிடந்த துணிகளை அரசு உடனடியாக வாங்கி அந்தப் பகுதி நெசவாளர்களுக்கு நன்மை புரிந்திருக்கிறது என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சி அது.

இதற்கிடையே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், முக்கியஸ்தர்களும் அவர்களுக்கு துணையாக போலீஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டு நான் கஞ்சி வழங்கச் செல்லும்போது போட்டியாக பிரியாணி விருந்தை நடத்தி பெரும் கலவரத்தை, (ஆகஸ்ட் 9ஆம் தேதி மதுரையில் நடத்தியது போல்) நடத்துவதற்கு திட்டமிட்டு விட்டார்கள். இதுகுறித்து நான் கவர்னரிடம் தெரிவித்தேன். கவர்னரைச் சந்திக்க இயலாத காரணத்தால் அவருடைய செயலாளரிடம் விவரங்களைச் சொன்னேன். அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் அம்மையார்குப்பம் போன்ற சிறிய ஊர்களில் குறுகிய ஒரு வழிப்பாதை அமைந்த சில பகுதிகளில் நான் சென்று வருவதும், கஞ்சி வழங்குகிற இடத்தில் அந்தச் சிறிய ஊரில் கலவரம் எதுவும் விளைந்தால் அமைதிப்படுத்துவதும் அவ்வளவு எளிதான காரியமல்ல.

அதுமட்டுமல்ல; ஆளுங்கட்சியும் போலீசும் சேர்ந்து கொண்டு அவர்களே சட்டம் ஒழுங்கு அமைதியைக் கெடுப்பது என்று முனைந்துவிடும் சூழ்நிலையில் அங்கே எப்படி அமைதியைக் காணமுடியும்? எனவே நான் முதல்நாள் இரவே அம்மையார்குப்பத்தில் கஞ்சி வழங்கும்

நிகழ்ச்சி நிறுத்தப்படுகிறது என்று அறிவித்து விட்டு பெங்களூர் சென்று விட்டேன். இதற்குப் பிறகு தான் மதுரையில் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று அங்கே போலீசாரும் ஆளுங்கட்சியினரும் அம்மையார்குப்பத்தில் அவர்கள் நடத்த வழியில்லாமல் போய்விட்ட வன்முறைச் செயல்களையும் அராஜகச் செயல்களையும் தி.மு.கழகத்திற்கு எதிராக நடத்தினார்கள் என்பதும் நமது கழக உடன்பிறப்புகள் கைது செய்யப்பட்டதும் நாடறிந்த செய்தி! அன்று போலீசாரும், ஆளுங்கட்சியினரும் நடந்து கொண்ட முறை ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதை பெரும்பாலும் எல்லா பத்திரிகைகளும் சுட்டிக்காட்டி கண்டித்திருக்கின்றன. விஷமிகள் ஒரு சிலரும், ஒரு சில வார ஏடுகள், நாளேடுகளும் மாத்திரம்தான் "கஞ்சி–பிரியாணி போட்டி" என்று கிண்டல் செய்து தி.மு.கழகத்தின் நல்லெண்ண ஏற்பாட்டை மக்களிடத்திலே தரக்குறைவாக விமர்சனம் செய்தன. அமைதியிலும் நெசவாளர் வாழ்விலும் ஜனநாயக மேன்மையிலும் அக்கறை கொண்ட யாரும் தி.மு. கழகத்தின் "நெசவாளர்களுக்கு கஞ்சி வழங்கும் ஏற்பாடு" பற்றி எந்தக் குறையும் கூறவில்லை.

"சிறு துளி பெருவெள்ளம்" என்பார்கள். நெசவாளர்களுக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய உதவி என்கின்ற பெருவெள்ளமாக நம்மால் இருக்க இயலாவிட்டாலும், சிறு துளியாக அந்த வெள்ளத்தில் கலப்போம் என்றுதான் அரசுக்கு உதவியாக அனுசரணையாக இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்தோம். அரசு ஏதோ தனக்கெதிராக இதைச் செய்வதாகக் கருதிக் கொண்டு அமளிக்கு வித்திட்டது பல இடங்களில்!

அமளியையே ஏற்படுத்தியது மதுரையில்! கழகத்தினர் மீது கொலை முயற்சி வழக்கும் தொடர்ந்தது!

ஆளுங்கட்சியான அ.தி.மு.க.; நாம் நெசவாளர்களுக்காக தொடங்கிய கஞ்சி வழங்கும் நிகழ்ச்சியை அதற்குரிய எரிச்சலின் காரணமாக கேலி செய்வதும், தாக்கிப் பேசுவதும், விரசமாக விமர்சிப்பதும் என்னை ஆச்சரியப்படுத்தவில்லை. ஆனால் எதிர்க்கட்சிகளின் வரிசையில் ஒன்றாக உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், அ.தி.மு.க. வினர் பிரியாணி வழங்குகின்ற நிகழ்ச்சிகளையும் தி.மு.க. சார்பில் கஞ்சி வழங்குகின்ற நிகழ்ச்சிகளையும் இரண்டையும் ஒன்று என்று போல் விமர்சித்து ஏட்டிக்குப் போட்டி என்று சொல்வது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

ஏட்டிக்குப் போட்டி என்றால் என் கேள்விக்கு மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விளக்கம் அளிக்க வேண்டும். கஞ்சி வழங்குகிற நிகழ்ச்சியை முதலில் தி.மு.கழகம் ஆரம்பித்தது. தி.மு.கழகம் வழங்குகின்ற அதே இடத்தில் அ.தி.மு.க.வினர் பிரியாணி வழங்குவதாக அறிவித்து கஞ்சி வழங்குகின்ற கழகத்தினர் மீது போலீஸ் துணையோடு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது ஏட்டிக்குப் போட்டியா? அல்லது கஞ்சி வழங்குகிறோம் என்று கைத்தறியாளர்களுடைய கண்ணீரைத் துடைக்க முதன்முதலாக முன்வந்தது ஏட்டிக்குப் போட்டியா? கழகச் சார்பில் கஞ்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட பிறகுதான் “நாங்கள் ஐந்து நாட்களுக்கு முன்பே கைத்தறியாளர்களுக்காக அமைச்சரவையில் திட்டங்களை வகுத்துவிட்டோம்” என்று ஜெயலலிதா கூறியதாகும்.

கஞ்சி வழங்குவதாக கழகம் அறிவித்த பிறகாவது கைத்தறியாளர்களின் துயரத்தை முழுமையாகத் துடைக்கா விட்டாலும் மிகக் குறைந்த அளவிற்காவது துடைத்திட இந்த அரசாங்கம் முன் வந்தது, கழகத்தினுடைய அறிவிப்பினால்தான் என்பதை சாதாரண அறிவு உள்ளவர்களும் புரிந்து கொள்ள முடியும்.

இதை நான் தி.மு. கழகத்திற்கு ஒரு கித்தாப்பாக சொல்லவில்லை. எந்தவொரு ஆட்சியிலும் ஒரு பகுதி மக்களின் கோரிக்கைகளை அவர்களுக்கு தொடர்புடைய பிரச்சினைகளை ஒரு அரசாங்கம் தானாக முன் வந்து நிறைவேற்றாத நிலையில் எந்தவொரு எதிர்க்கட்சியாவது அதை நினைவுபடுத்தி, அரசின் கவனத்தை அந்தப் பகுதி மக்களின் பக்கம் திருப்புவது ஜனநாயகத்திலே ஒரு நடைமுறை என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கள் அனுபவ பூர்வமாக உணர்ந்திருப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இதனால் ஏதோ தி.மு. கழகத்திற்கு தனி வலிவோ, பெருமையோ வந்து விடும் என்று அவர்கள் கருதியதாலோ அல்லது அ.தி.மு.க. ஆட்சிக்கு இதனால் பின்னடைவு ஏற்பட்டு விடும் என்று அஞ்சியதாலோ அவர்களுடைய பத்திரிகையில் பிரியாணி முட்டை வழங்குவதையும், கஞ்சி வழங்குவதையும் இரண்டும் ஒன்றுதான் என்பதைப்போல எழுதுவதும், படங்கள் வெளியிடுவதும் அவர்களுடைய பத்து நாள் பிரச்சாரக் கூட்டங்களில் இதையே தலைப்பாக அமைத்துக் கொண்டு பேசுவதற்கு பயிற்சி அளித்துக் கொண்டிருப்பதும் எந்த வகையான நியாயம் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலே உள்ள தலைவர்கள் எண்ணிப் பார்க்க மறுத்தாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய

தலைவர் நல்லக்கண்ணு போன்றவர்களாவது சிந்தித்துப் பார்ப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

"செக்கும் சிவலிங்கமும் உனக்கு ஒன்று தானா?" என்று மூடாத்மாக்களைப் பார்த்து கிராமப்புறத்திலே கேலி செய்வார்கள்.

ஆனால் அறிவு ஜீவிகள் எனத் தங்களைக் காட்டிக் கொள்பவர்கள்,

தி.மு.க. கஞ்சி வழங்கும் நிகழ்ச்சியும்,

அ.தி.மு.க.வின் பிரியாணி முட்டை வழங்கும் நிகழ்ச்சியும்,

ஒன்றுதான் என்று கட்டுரை தீட்டுகிறார்கள்,

கார்ட்டூன் போடுகிறார்கள்.

இவர்களை நினைத்து சிரிப்பதா? அழுவதா? என்றே தெரியவில்லை!

அறிவுடையோர்தான் அவர்கள்;

ஆனால் அந்த அறிவையும் மிஞ்சிடும் "அசூயை" அவர்களுக்கு நம்மீது!

அதனால்தான்

அண்ணா அடிக்கடி கூறுவது போல

பச்சைக்கொடிக்கும்

பச்சைப் பாம்புக்கும்

வேறுபாடு தெரியாத 'பாமரர்' போல ஆகிவிடுகிறார்கள்!

எனவே தன்னால் இயன்ற அளவிற்கு இதைச் செய்கிறேன் என்று கூறி பத்து இலட்சம் ரூபாய்க்கான கைத்தறி ஆடைகளை வாங்கி அதனை ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்குகின்ற புரட்சிக் கலைஞர் விஜயகாந்தின் அறிவிப்பை வரவேற்கிறேன்.

கடந்த ஆண்டு வரையில் தி.மு.கழக ஆட்சி தொடர்ந்து கடைப் பிடித்து வந்த ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கான கைத்தறி துணிகளை இலவச வேட்டி சேலைகளாக ஏழை மக்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிய காரணத்தால் கைத்தறியாளர்கள் நிலை தாழாமல் இருந்தது என்பதையும், அந்த இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை ஜெயலலிதாவின் அரசு கைவிட்ட காரணத்தால்தான் பசி, பட்டினி என்ற பரிதாபத்திற்கு நெசவாளப் பெருமக்கள் ஆளாகியுள்ளார்கள் என்பதையும் எல்லோரும் புரிந்து கொண்டே இருக்கிறார்கள்.

எனவே தி.மு.க. ஆட்சியில் ஏழை எளியோர்க்கு தரமான இலவச வேட்டி சேலை வழங்கப்பட்டதையும்; அதனால் கைத்தறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்ததையும்; அதை வேண்டாமென்று அ.தி.மு.க. ஆட்சியினர் நிறுத்தியதால்தான் கைத்தறியாளர்க்கு இவ்வளவு துன்ப துயரம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அடையாளபூர்வமாக உணர்த்துவதற்கும், இனியாவது செல்வி ஜெயலலிதா தனது முரட்டுப் பிடிவாதத்தை விட்டுவிட்டு இலவச வேட்டி சேலை திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும் என்பதை

வலியுறுத்துவதற்கும் நாம் கஞ்சி வழங்கிய நிகழ்ச்சியுடன் தம்பி விஜயகாந்த் கைத்தறி துணிகளை பத்து லட்சம் ரூபாய்க்கு வாங்கி, ஏழை எளியோர்க்கு இலவசமாக வழங்கும் நிகழ்ச்சியும் இணைந்து பயன்படுமென்று நம்புகிறேன்.

25.8.2002
முரசொலி

அன்புள்ள,
**மு.க.**





ARASU ARTS